# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

*2141 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்**

## பதவிகள் - வெற்றிடம்

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவாளர் பதவி - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் / மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர், 40 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | அம்பாறை | வெவ்கம்பத்துவ வடக்கு பிரிவின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை. |

09-282

---

**ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

**உள்வாரி மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

01. **பதவி : பேராசிரியர் (பதவி 01)**

(இப்பதவியானது ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.)

(i) வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 55 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

(ii) இணைத்துக்கொள்வதற்கான தகைமை :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சமூகப் பணி/சமூக விஞ்ஞானப் பாடங்களில் முதற் தர அல்லது 2 ஆம் தர (உயர்) சித்தியுடன் கூடிய பட்டம்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சமூகப் பணி/ சமூக விஞ்ஞானப் பாடங்களில் தரச் சித்தி இல்லாத பட்டத்துடன் சமூகப்பணி, சமூக நலன்புரி, சமூகக் கொள்கை, உளவளத்துணை, சமூக/ சமுதாய அபிவிருத்தி ஆகிய பாடங்களில் அல்லது அத்துறைகளோடு தொடர்புபட்ட, பல்க லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட/ குறைந்தது ஒரு வருட காலத்திற்கு குறையாத முதுமாணிப் பட்டம்

மற்றும்

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சமூகப் பணி அல்லது சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலாநிதி பட்டம் பெற்றிருத்தல் (சமூகப் பணி கலாநிதி பட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்)

மற்றும்

(இ) குறித்த கலாநிதி பட்டம் பெற்றதன் பின்னர் பல்கலைக்கழக மட்டத்தில் விரிவுரை மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் குறைந்தது 10 வருட அனுபவத்துடன் கல்வி நிருவாகத்தில் போதிய அனுபவம் பெற்றிருத்தல்.

அல்லது

(ஈ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 10 வருட சேவைக்கால அனுபவத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் சமூகப் பணி/ சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலாநிதி பட்டத்தினை பெற்றிருத்தல்.

மற்றும்

(உ) ஆங்கில மொழியில் சிறந்த முறையில் பணியாற்றும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

(iii) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை:

| | |
|---|---|
| கற்பித்தலுக்கான பங்களிப்பும் கல்வி அபிவிருத்தியும் | 20 புள்ளிகள் |
| ஆய்வு மற்றும் புத்தாக்க செயற்பாடுகள் | 45 புள்ளிகள் |
| அறிவுப் பகிர்வும் தேசிய அபிவிருத்தியும் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின்போதான முன்னேற்றம் | 20 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

(iv) சம்பள அளவுத் திட்டம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 961 இன் பிரகாரம் மாதாந்தம் ரூபா 95,761.00 சம்பள அளவுத்திட்டம் மற்றும் பதவிக்கான ஏனைய சலுகைகளும் கிடைக்கப்பெறும்.

02. **பதவி : சிரேஷ்ட விரிவுரையாளர் (பதவிகள் 02)**

(i) வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் (தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் மற்றும் அரசாங்க நியதிச்சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்த பட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

(ii) கல்வித்தகைமை : (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் இளமானிப் பட்டத்துடன் சமூகப்பணியில் (Social Work) கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல்.

அனுபவம் (ஆ) அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 10 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணிக் கற்றல் மற்றும் கற்பித்தல் துறைகளில் அனுபவமிருத்தல்.

(iii) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை:

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில்வாண்மை அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின்போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(vi) சம்பள அளவுத் திட்டம் : AR-2-2016 - ரூபா 71,585.00 - 10 × 1,910 - ரூபா 90,685.00 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II படி சம்பளம் வழங்கப்படும். AR-2-2006A - ரூபா 34,550.00 - 10 × 925 - ரூபா 43,880.00 (மாதாந்தம்)

03. **பதவி : பயிற்சி உத்தியோகத்தர் II (பதவி 01)**

(i) வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரசாங்க நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்த பட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

(ii) கல்வித் தகைமை : (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகமொன்றில் / உயர் கல்வி நிறுவனமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (உயர் தர) பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் / உயர்கல்வி நிறுவனமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாம் பட்டத்துடன் முதுமாணி பட்டம்.

அத்துடன்

(இ) சமூக அபிவிருத்தி மற்றும் நலன்புரி தொடர்பாக அரசாங்க உயர் கல்வி/ பயிற்சி நிறுவனமொன்றில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமிடல், அமுல்படுத்தல், பயிற்சியளித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை:

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளி |
| குறித்த மேலதிக தொழில்வாண்மை அனுபவம் | 30 புள்ளி |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளி |
| நேர்காணலின்போதான முன்னேற்றம் | 25 புள்ளி |
| மொத்தம் | 100 புள்ளி |

(iv) சம்பள அளவுத் திட்டம் : AR-1-2016 - ரூபா 51,285 - 5 × 1,135 - 5 × 1,335- 15 × 1,590 - ரூபா 87,485 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன் படி சம்பளம் வழங்கப்படும். AR-1-2006A - ரூபா 24,725 - 5 × 550 - 5 × 645 - 15 × 770 - ரூபா 42,250 (மாதாந்தம்)

04. **பதவி : கணக்காளர் II (பதவி 01)**

(i) வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரசாங்க நியதிச்சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ii) இணைத்துக்கொள்வதற்கான தகைமை : வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பட்டயக் கணக்காளர் அடிப்படைப் பரீட்சை சான்றிதழுடன் குறித்த துறையில் 05 வருட தகைமையின் பின்னரான அனுபவம் அல்லது ACCA, CIMA, யின் AB மற்றும் பகுதி I மற்றும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) / உயர் தேசிய வணிகவியல் டிப்ளோமா (HNDC) சான்றிதழுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட வணிகவியல் பட்டத்துடன் குறைந்தபட்சம் 05 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(i) கனிஷ்ட முகாமைத்துவ சேவைப் பிரிவில் 1 ஆம் தரப் பதவியில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையினூடாக இணைத்துக் கொள்ளும் போது முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 1 ஆம் தரத்தில் 10 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை:

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த துறைசார்ந்த மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின்போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(iii) சம்பள அளவுத் திட்டம் : MM 1-1-2016 - ரூபா 53,175.00 - 10 × 1,375 - 15 × 1,910 = ரூபா 95,575 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன் படி சம்பளம் வழங்கப்படும். MM 1-1-2006A - ரூபா 25,640.00 - 3 × 665 - 7 × 735 - 15 × 925 - ரூபா 46,655.00 (மாதாந்தம்)

05. **பதவி : உதவி நூலகர் II (பதவி 01)**

(i) வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரசாங்க நியதிச்சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

(ii) கல்வித் தகைமை :**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட முதலாவது பட்டத்துடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றிற்குரிய நூலகமொன்றில் நூலகராக குறைந்தது 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை:

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளி |
| குறித்த துறைசார்ந்த மேலதிக அனுபவம் | 30 புள்ளி |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளி |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளி |
| மொத்தம் | 100 புள்ளி |

(iv) சம்பள அளவுத் திட்டம் : JM 1-1-2016 - ரூபா 42,600.00 - 10 × 755 - 18 × 1,135 - ரூபா 70,580.00 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன் படி சம்பளம் வழங்கப்படும். JM 1-1-2006A - ரூபா 20,525.00 - 10 × 365 - 18 × 550 - ரூபா 34,075.00 (மாதாந்தம்)

06. **பதவி : நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (நிலைய பொறுப்பதிகாரி) III (பதவி 01) (ரண்ண நிலையத்திற்காக)**

(i) வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் (தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் மற்றும் அரசாங்க நியதிச்சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

(ii) கல்வித் தகைமை : (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டம்.

மற்றும்

அனுபவம் (ஆ) அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமூகப்பணி, உளவளத்

துணை அல்லது சமூக அபிவிருத்தித் துறையில் ஒரு வருடத்திற்கு குறையாத காலத்தை கொண்ட டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நிலையப் பொறுப்பாளர் பதவியில் ஒரு வருடத்திலும் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத் திட்டம் : MA-3-2016 - ரூபா 32,200.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 5 × 750 - ரூபா 54,960 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிரூபம் 02/2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக் கையின் உப பிரிவு II படி சம்பளம் வழங்கப்படும். MA-3-2006A - ரூபா 15,600.00 - 10 × 215 - 4 × 240 - 15 × 320 - 7 × 320 - ரூபா 26,030.00 (மாதாந்தம்)

**07. பதவி : ஆய்வு உதவியாளர் III (பதவிகள் 02)**

(i) வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் (தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் மற்றும் அரசாங்க நியதிச்சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

(ii) கல்வித் தகைமை : (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆய்வு பாடங்களை உள் ளடக்கிய சமூக விஞ்ஞானங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம்.

அத்துடன்

(ஆ) அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாக குறைந்த பட்சம் ஒரு வருடம் அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத் திட்டம் : MA-3-2016 - ரூபா 32,200.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 5 × 750 - ரூபா 54,960.00 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிரூபம் 02/2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன் படி சம்பளம் வழங்கப்படும்.

MA-3-2006A - ரூபா 15,600.00 - 10 × 215 - 4 × 240 - 15 × 320 - 7 × 360 - ரூபா 26,030.00 (மாதாந்தம்)

**08. பதவி : உதவி பதிவாளர் II (பதவி 01)**

(i) வயதெல்லை : விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரசாங்க நியதிச்சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

(ii) கல்வித் தகைமை : **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு**

பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முதலாவது பட்டத்தையும் மற்றும் அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் கல்வி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் குறைந்தபட்சம் 02 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை:

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த துறைசார்ந்த மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(iv) சம்பள அளவுத் திட்டம் : JM 1-1-2016 - ரூபா 42,600.00 - 10 × 755 - 18 × 1,135 - ரூபா 70,580.00 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிரூபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன் படி சம்பளம் வழங்கப்படும்.

JM 1-1-2006A - ரூபா 20,525.00 - 10 × 365 - 18 × 550 - ரூபா 34,075.00 (மாதாந்தம்)

அனைத்து பதவிகளுக்குமான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்:

1. பதவி நிரந்தரமானது.
2. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.
3. மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தல்.

குறிப்பு : இப்பதவி வெற்றிடங்கள் (செயற்திட்ட உதவியாளர் - ரண்ண நிலையத்திற்கான நிலைய பொறுப்பதிகாரி தவிர) பிரதான அலுவலகத்தில் மாத்திரம் காணப்படுவதுடன் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் அந்நிலையங்களில் கடமையாற்ற வேண்டும். பிரதான அலுவலகத்தினை 2020 ஆம் ஆண்டு சீதுவை லியனகேமுல்லையிலுள்ள நிலையான கட்டிடத்தொகுதிக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

சேவை நிபந்தனை - 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

இணைத்துக்கொள்ளும் முறை- நியமன அதிகாரியின் பணிப்பின் பேரில் நேர்காணல் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் நடாத்தப்படும். அதிக புள்ளிகளை பெற்றவர்களுள் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2019.10.04 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள/ நிறுவன தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

எம். ரீ. ஆர். சாமினி அத்தனாயக்க,
பணிப்பாளர் நாயகம் (ப.க.),
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
48A, நாவல வீதி, ராஜகிரிய,
2019, ஒற்றோபர் 04.

9-387

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கைக் கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (2019)**

இலங்கைக் கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019, திசெம்பர் மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2019, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிக்கு கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

03. **பாடவிதானம்.**- முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் அதன் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் போது பாடங்களுக்கு தோற்றுகையில் ஒரே அமர்விலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

04. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

| விடயம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நிதி முறைமைகள் | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. நிருவாகம் | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் - 1 | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 4. திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் - 2 | 03 மணித்தியாலம் | 100 | 40 |

பரீட்சைக்கான பாடப்பரப்பு

| விடயம் | பாடப்பரப்பு |
|---|---|
| 1. நிதி முறைமைகள் | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதி ஒழுங்கு விதி நிதிப்பிரமாணம் - (X ஆம் அத்தியாயம் தவிர) |
| 2. நிருவாகம் | (அ) அலுவலக முறை, அலுவலக முகாமை மற்றும் அலுவலக ஒழுங்குபடுத்தும் முறைமைகள் தொடர்பான அறிவு.<br>(ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியினூடாக திருத்தம் செய்யப்பட்ட தாபனவிதிக் கோவை அத்தியாயம் I-XXII மற்றும் தாபனவிதிக் கோவையின் VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XIX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII அத்தியாயங்கள். |
| 3. திணைக்களப் பிரமாணம் - 1 | விலங்குச் சட்டம், விலங்கு நோய்ச்சட்டம் மற்றும் திணைக்கள கட்டளை கால்நடை வைத்திய சேவைக்கு பொருத்தமான சுற்றுநிருபங்கள் |
| 4. திணைக்களப் பிரமாணம் - 2 | (அ) மாதிரிகளை அனுப்புதல், பிரேத பரிசோதனை உள்ளிட்ட நோய் ஆய்வு, உறுதி ஆய்வுகூட பரிசோதனை முறைகள், கர்ப்பப் பரிசோதனை உள்ளிட்ட இனங்காணும் பரிசோதனை, வெளிக்கள நோய் ஆய்வு உறுதி பரிசோதனை விலங்குகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து குருதிபாயம் (Sera) ஆகிய முற்காப்பு நடவடிக்கைகள் |

| விடயம் | பாடப்பரப்பு |
|---|---|
| | (ஆ) செயற்கை முறைச் சினைப்படுத்தல் செயல்முறையும் தொழில்நுட்பமும், இனப்பெறுக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களும் கன்று வளர்ப்பும் அடைகாத்தல், குஞ்சு பொறித்தல், கோழிக்குஞ்சு வளர்ப்பு, கால்நடைகளுக்கான போசணை, உணவுப் பண்டம், பசுந்தீவனப் பயிர்ச்செய்கை வெவ்வேறுபட்ட பயிர்கள் புற்செய்கை, உலர்புல், சைலேஜ் தயாரிப்பு, கால்நடைப் பராமரிப்பு என்பன.<br><br>(இ) பால் உற்பத்தி, கிருமியளிக்கப்பட்ட பாலை போத்தல்களில் அடைத்து எடுத்துச் செல்லல், பால் சுகாதாரம், பாதுகாப்பு, பால் ஆடை பகுத்தல் உள்ளடங்களாக பரிசீலனை செய்தல், பால் ஆடை நீக்கல், பட்டர் நெய் மற்றும் தயிர் உற்பத்தி<br><br>(ஈ) அறுப்பு நிலையம், விலங்கு அறுப்புச் செய்தல் இறைச்சிகளை இனங்காணுதல் உட்பட இறைச்சிகளை பரீட்சித்தல். |

05. கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியை கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கு தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

“திணைக்களப் பரீட்சைகளுக்குத் (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை உட்பட) தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரசாங்க சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்கு சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான மொழியாக இருக்க வேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்து கொள்வதற்கு தகுதி பெற்ற அல்லது அரச கரும மெழியாகும்.”

06. இப்பரீட்சை, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பேராதனையில் அமையப் பெறும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.

07. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

08. விண்ணப்பப் பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய ஏ4 தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இயைய அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

09. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவர். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

10. விண்ணப்பங்கள் யாவும் 2019, ஒற்றோபர் 4 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இலக்கம் 13,
கெட்டம்பே, பேராதனை.

11. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்துக்கு அமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியவராயின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்கு அமரும் மொழி மூலம், விண்ணப்பகாரரது கையொப்பம் மற்றும் திணைக்கள தலைவரது சான்றிதழ் என்பவற்றுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பகாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பகாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை யிலும் திணைக்கள இணையதளத்திலும் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பகாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதத்தை தொலைநகலின் ஊடாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியை அனுப்பி வைப்பதற்காக விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது சிறந்ததாகும். அங்கு தேவையான தகவல்களை உறுதி செய்து கொள்வதன் பொருட்டு விண்ணப்பக்காரரினால் தன்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி பரீட்சை கட்டணம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச்சீட்டின் பிரதி விண்ணப்பம் பதிவுத் தபாலிலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

13. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும். விண்ணப்பத்தில் அல்லது பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பகாரரது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம் இருந்து சான்றுபடுத்தி இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தமக்குரித்தான பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்கு அமருதல் வேண்டும். பரீட்சை தினமன்று தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பகாரர் பரீட்சைக்கு அமருவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

14. இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது.

(அ) முதல் அமர்வில் முழுப் பரீட்சைக்கான கட்டணமோ அல்லது ஒரு பகுதிக்கான கட்டணமோ அறவிடப்படமாட்டாது.

(ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக
முழுப் பரீட்சை - ரூபா 1,200.00
ஒரு பாடம் - ரூபா 600.00

இப்பரீட்சைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ள அல்லது தற்போதைக்கு அமர்ந்துள்ள விண்ணப்பகாரர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களை செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணயையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்குமாறு தீவில் அமையப் பெற்றுள்ள எந்தவொரு தபால்/ உப தபால் பணிமனையில் அல்லது பிரதேச/ மாவட்டச் செயலாளர் பணிமனைக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் நிழற்படப்பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

16. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே மொழி மூலங்களில் ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமேயாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

டாக்டர் கே. டி. ஆரியபால,
பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத்
திணைக்களம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
2019, ஒகத்து.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பொது நிர்வாக, அனர்த்த முகாமை மற்றும் கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு**

**இலங்கைக் கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (2019)**

The First Efficiency Bar Examination For The Officers In Sri Lanka Animal Production and Health Service - 2017 (2019)

(கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

01. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----------------------------------------------.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் :-----------------------------------------------.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உதாரணம் GUNAWARDANE H.M.S.K)

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----------------------------------------------.

02. தபால் முகவரி ஆங்கில பெரிய எழுத்துக்களில் (அனுமதி அட்டை அனுப்புவதற்காக) :------------------------.

03. பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்.)

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

05. கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

06. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் :
(தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.)

| பாட இலக்கம் | பாடம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

07. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளீரா? அல்லது தோற்றியுள்ளீரா? என்பதை குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக. :-----.

08. பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

09. பதவிப்பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

திணைக்களத்தின் பெயர் :-----------------------------------------------.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

10. இலங்கைக் கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :-----.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் சரியானவையெனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா

பணம் செலுத்தப்பட்ட பணிமனை :...................... பற்றுச்சீட்டு இலக்கம் :.....................

பற்றுச்சீட்டினை இங்கு கழறாதவாறு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்)

------,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :-----.

**கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.**

மேற்குறிப்பிட்ட விபரங்களையுடைய விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றத் தகைமை உடையவர் என்றும் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகைமையுள்ளது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

* விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும்.
(அலுவலக முத்திரை)

திகதி :-----.
* (கட்டணம் செலுத்தாத விடத்து வெட்டிவிடவும்.)

*09-331/1*

---

**இலங்கைக் கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (2019)**

இலங்கைக் கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019, திசெம்பர் மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2019, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி அன்று கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

02. **பாடவிதானம்.**- இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் அதன் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் பரீட்சைளின் போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

03. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாப்பத்திரம் | விடய இல. | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடை வதற்கான புள்ளி |
|---|---|---|---|---|
| 1 ஆம் பகுதி | 01 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| அல்லது | | | | |
| 2 ஆம் பகுதி | 02 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| மற்றும் | | | | |
| 3 ஆம் பகுதி | | 3 ஆம் பகுதியில் 02 பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும். | | |
| 1. வினாப்பத்திரம் | 03 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. வினாப்பத்திரம் | 04 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. வினாப்பத்திரம் | 05 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 4. வினாப்பத்திரம் | 06 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 5. வினாப்பத்திரம் | 07 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 6. வினாப்பத்திரம் | 08 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 7. வினாப்பத்திரம் | 09 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 8. வினாப்பத்திரம் | 10 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 9. வினாப்பத்திரம் | 11 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 10. வினாப்பத்திரம் | 12 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 11. வினாப்பத்திரம் | 13 | 03 மணித்தியாலம் | 100 | 40 |

04. பரீட்சை தொடர்பான பாடப்பரப்பு

| வினாப்பத்திரத்தின் பெயர் | விடய இல. | பாடப்பரப்பு |
|---|---|---|
| 1 ஆம் பகுதி | 01 | பாடப்பரப்பின் 2:1, 2:2, 4:1, 4:2, 5:2, 5:8, 6:5, 7:2:1, 8:2, 8:2:2, 8:2:3, 8:3:1, 9:2, 9:4, 9:6, 9:7, பகுதிகள் |
| 2 ஆம் பகுதி | 02 | 1:1:1, 1:1:4, 1:2:1, 3:2, 3:1:1, 3:1:2, 3:2:1, 10:1:1,10:1:2, 10:1:3, 10:1:4, 10:1:6, 10:2:1, 10:2:8, 10:4:1, |
| 3 ஆம் பகுதி | | |
| வினாத்தாள் 1 | 03 | தொற்றுநோயியல் |
| வினாத்தாள் 2 | 04 | கால்நடைப் பொருளியல் |
| வினாத்தாள் 3 | 05 | மிருக வைத்திய பொதுச் சுகாதாரம் |
| வினாத்தாள் 4 | 06 | விவசாய விஸ்தரிப்பு |
| வினாத்தாள் 5 | 07 | பரம்பரையியலும் சினைப்படுத்தலும் |
| வினாத்தாள் 6 | 08 | விலங்கு உடற்றொழியியலும் இனப்பெருக்கமும் |
| வினாத்தாள் 7 | 09 | கால்நடைகளுக்கான வீடமைப்பு மற்றும் முகாமைத்துவம் |
| வினாத்தாள் 8 | 10 | விலங்கு போசனை |
| வினாத்தாள் 9 | 11 | பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர் |
| வினாத்தாள் 10 | 12 | பிரயோக மிருகவியல் நுண்ணுயிரியலும் நீரப்பீடனவியலும் |
| வினாத்தாள் 11 | 13 | பிரயோக மருத்துவம், நோயியல் மற்றும் ஒட்டுண்ணியியல் |

**குறிப்பு.**- இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை விண்ணப்பதாரர் அமர வேண்டியது பகுதி 1 அல்லது பகுதி 2 வினாப்பத்திரம் இரண்டில் ஒன்றுக்கு மற்றும் பகுதி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள 11 வினாப்பத்திரங்களில் இருந்து இரு வினாப்பத்திரங்களுக்கு மட்டும் அமரல் வேண்டும். சித்தி எய்துவதன் பொருட்டு ஆகக் குறைந்தது 40% புள்ளிகளை ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் பெறுதல் வேண்டும்.

05. கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியை கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கு தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

“திணைக்களப் பரீட்சைகளுக்குத் (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை உட்பட) தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரசாங்க சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்கு சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான மொழியாக இருக்க வேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கு தகுதி பெற்ற அல்லது அரச கரும மொழியாகும்.”

06. இப்பரீட்சை, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.

07. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

08. விண்ணப்பப் பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய A4 தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்த கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் ஒளிப்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும். மேலும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமையாத மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறியத் தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

09. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவர். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

10. விண்ணப்பங்கள் யாவும் 2019, ஒற்றோபர் 4 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இலக்கம் 13,
கெட்டம்பே, பேராதனை.

11. வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்திற்கு அமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியவராயின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்கு அமரும் மொழி மூலம், விண்ணப்பதாரரது கையொப்பம் மற்றும் திணைக்கள தலைவரது சான்றிதழ் என்பவற்றுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பகாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் மூலம் மற்றும் திணைக்கள இணையதளத்தில் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பதாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதத்தை தொலைநகலின் ஊடாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியை அனுப்பி வைப்பதற்காக விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது சிறந்ததாகும். அங்கு தேவையான தகவல்களை உறுதி செய்து கொள்வதன் பொருட்டு விண்ணப்பதாரரினால் தன்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி பரீட்சை கட்டணம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச்சீட்டின் பிரதி விண்ணப்பம் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

13. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும். விண்ணப்பத்தில் அல்லது பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம்

வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம் இருந்து சான்றுபடுத்தி இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தமக்குரித்தான பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்கு அமருதல் வேண்டும். பரீட்சை தினமன்று தமது கையொப்பத்தை சான்றுபடுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்கு அமருவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

14. இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது.

(அ) முதல் அமர்வு - முழுப் பரீட்சை அல்லது ஒரு பகுதிக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.
(ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக
முழுப் பரீட்சை - ரூபா 1,200.00
ஒரு பாடம் - ரூபா 600.00

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள அல்லது இதற்கு முன்னர் விண்ணப்பம் செய்துள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களை செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்குமாறு தீவில் அமையப் பெற்றுள்ள எந்தவொரு தபால்/ உப தபால் பணிமனையில் அல்லது பிரதேச/ மாவட்ட செயலாளர் பணிமனைக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப்பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

15. விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

16. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே மொழிகளுக்கிடையே ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமேயாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

டாக்டர் கே. டி. ஆரியபால,
பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத்
திணைக்களம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே,
பேராதனை,
2019, ஓகத்து.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பொது நிர்வாக, அனர்த்த முகாமை மற்றும் கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு**
**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (2019)**

THE SECOND EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE - 2017 (2019)

(கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

01. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA) :

(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உதாரணம் GUNAWARDANE H.M.S.K)

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

02. தபால் முகவரி ஆங்கில பெரிய எழுத்துக்களில் (அனுமதி அட்டை அனுப்புவதற்காக) :-----.

03. பால் :
பெண் - 1 ☐
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்.)

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் :
(தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.)

| பாட இலக்கம் | பாடம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

07. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளீரா? அல்லது தோற்றியுள்ளீரா? என்பதை குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக. :-----.

08. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

09. பதவிப்பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
திணைக்களத்தின் பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

09. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :-----.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா

பணம் செலுத்தப்பட்ட பணிமனை :...................... பற்றுச்சீட்டு இலக்கம் :.....................

| |
|---|
| பற்றுச்சீட்டினை இங்கு கழறாதவாறு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்) |

------,
திகதி :-----. விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றத்தகைமை உடையவர் என்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

* விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும்.
திகதி :-----. (அலுவலக முத்திரை)

* (கட்டணம் செலுத்தாத விடத்து வெட்டிவிடவும்.)

09-331/2

---

**போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு**

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவைத்தொகுதியின்
மோட்டார் வாகனப் பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை- 2018 (2019)

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவைத் தொகுதியின் மோட்டார் வாகனப் பரிசோதகர் தரம் III பதவிகளில் காணப்படும் 45 வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகைமைவாய்ந்த நபர்களைத் தெரிவு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையில், கீழே குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது கொழும்பில் மட்டுமே நடாத்தப்படும்.

01. **சேவை நிபந்தனைகள்:** அரசாங்க சேவைகளைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கமையவும், அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016க்கு அமையவும் தயாரிக்கப்பட்டு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்ட MN 03 - 2016 ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய, தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் மோட்டார் வாகனப் பரிசோதகர் பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்கள்.

இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

02. **சம்பளத் தொகுதியும் அளவுத் திட்டமும்.**- சம்பள குறியீட்டு இலக்கம்: MN 03 - 2016 சம்பள அளவுத்திட்டம்: ரூபா 31,040 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 57,550

03. **பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை.**- எழுத்துமூலமான போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் முடிவுகளுக்கமைய ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

**எழுத்துமூலப் பரீட்சை.**- எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளது மொத்தப் புள்ளிகளின் வரிசைக்கிரமத்தைக் கருத்திற் கொண்டு, ஆட்சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை யானவர்களை பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி, அதில் தகைமை பெறுபவர்கள் இப்பதவிக்கு தெரிவு செய்யப் படுவார்கள்.

**பொதுவான நோர்முகப் பரீட்சை.**- இதற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் இதன்போது தகைமைகளைப் பரிசோதிப்பது மாத்திரம் இடம்பெறும்.

I. **பரீட்சை தொடர்பான விபரங்கள்:**

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. மோட்டார் இயந்திர விஞ்ஞானம் தொடர்பான பொதுவான அறிவு | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 2. நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |

II. **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| மோட்டார் இயந்திர விஞ்ஞானம் தொடர்பான பொதுவான அறிவு | கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப துறைகள் தொடர்பான அடிப்படை அறிவு, குறித்த துறை களுக்கு ஏற்புடையவாறான குறைபாடுகள் தொடர் பான அடிப்படை அறிவு.<br>(1) டீசல் மற்றும் பெட்ரோல் இயந்திரத்தின் செயற்பாடு மற்றும் வேக தள்ளுபடி நிலைமை (Velocity rebate)<br>(2) கிளச்சு மற்றும் செலுத்துகை முறைமை |

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
| --- | --- |
| | (3) உராய்வு நீக்கும் முறைமை மற்றும் குளிராக்கும் முறைமை<br>(4) மின் முறைமை<br>(5) டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்களின் எரிபொருள் முறைமைகள்<br>(6) கால் தடுப்பு முறைமை, தடுப்பின் வினைத்திறனைப் பரீட்சிக்கும் உபகரணங்களைப் பரிசோதித்தல், எதிர்த்தாக்கல் காலம் மற்றும் நிறுத்தும் தூரம்<br>(7) கைதடுப்பு முறைமை<br>(8) சில்லு வரிசையாக்கல் மற்றும் சுக்கான் பொறிநுட்பத்தை பரீட்சிக்கும் உபகரணங்கள்<br>(9) இடைநிறுத்தும் நிலை (suspension) முறைமை<br>(10) மோட்டார் வாகனமொன்றின் தர அறிக்கையைத் தயாரித்தல்<br>(11) மோட்டார் வாகனமொன்றின் பொருட்டு தகுதிச் சான்றிதழ் வழங்குதல்<br>(12) திணைக்களத்தின் பணிகள் மற்றும் மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவருக்குரிய கடமைகள் தொடர்பான பொதுவான அறிவு<br>(13) வர்ணந்தீட்டல், காய்ச்சி ஒட்டுதல் மற்றும் பொருத்துதல் தொடர்பான அறிவு<br>(14) தன்னியக்க செலுத்துகை. |
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரிடமுள்ள மொழிசார் மற்றும் எண்சார் திறன், பகுத்தறியும் ஆற்றல் போன்ற துறைகள் அடங்கலாக பரீட்சார்த்திகளின் நுண்ணறிவை மதிப்பிடுமுகமாகத் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு மற்றும் குறுகிய விடையளிக்கக்கூடிய விதத்திலான வினாக்களைக் கொண்டிருக்கும். |

04. **பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள்:**

1. **கல்வித் தகைமைகள்:**

I. துறையுடன் தொடர்புடைய இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானம் /கணிதம் /தொழில்நுட்பவியல் பாடத்துறையுடன் தொடர்புடைய மூன்று பாடங்களில் க.பொ.த(உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

II. சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கு திறமைச்சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. ( சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

2. **தொழிற்றகைமைகள்**

I. மொறட்டுவைப்பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் அல்லது பொறிமுறை எந்திரவியல்,(தானாகவியங்கி இயந்திரவியல் துறையுடன் தொடர்புடையது)

ஐஐ. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (தானாகவியங்கி இயந்திரவியல் துறையுடன் தொடர்புடையது)

ஐஐஐ. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (தானாகவியங்கி இயந்திரவியல் துறையுடன் தொடர்புடையது),

ஐஏ. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (தானாகவியங்கி இயந்திரவியல் துறையுடன் தொடர்புடையது)

ஏ. இலங்கைப் பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் பகுதி I இனை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். (மோட்டார் பொறியியல் விஞ்ஞான பாடத்துடன்),

ஏஐ. தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் திறன் (NVQ) 6 மட்டத்திலான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல். (தானாகவியங்கி இயந்திரவியல் துறையுடன் தொடர்புடையது)

ஏஐஐ. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விசாரித்தறிந்து கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமம் என மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிற தொழிநுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

3. **தொழில்சார் அனுபவம்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பவியல் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பிற்பாடு, அரசாங்கத்தில் அல்லது அரச கூட்டுத்தாபன/ நியதிச் சட்ட சபையொன்றில் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு குறைந்தபட்சம் 10 ஊழியர்கள் பொருட்டு பங்களிப்புச் செய்கின்ற, மோட்டார் வாகனங்களில் டீசல் மற்றும் பெட்ரோல் என்ஜின், கியர் பெட்டி, டிபரன்ஷல், பிரேக் கட்டமைப்பு, கை பிரேக் கட்டமைப்பு, சுக்கான் கட்டமைப்பு, மின்கட்டமைப்பு, சஸ்பென்ஷன் கட்டமைப்பு போன்றவற்றை திருத்தம் செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் வாகன திருத்தும் நிலையம் ஒன்றில் தானாகவியங்கி இயந்திரவியல் துறையில், குறைந்த பட்சம் இரண்டு வருட மேற்பார்வை மட்டத்திலான அனுபவத்தைப் பெற்றிருத்தல்,

4. **உடல் தகைமைகள்**.- இலங்கையின் அனைத்து பாகங்களிலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான கடமைகளை ஆற்றுவதற்கும் தேவையான உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல்.

5. **பிற தகைமைகள் :**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல்.

II. விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல்.

III. வலதுகுறைந்தோருக்கான வாகனங்கள் தவிர்ந்த மோட்டார் கோச் (D) பார மோட்டார் லொறி (CE) மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல்.

IV. பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என விண்ணப்பம் கோரப்படுகின்ற அறிவித்தலில் / வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதியில் உரிய தகைமைகளை அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

V. ஏதேனும் மதம் சார் சபைகளில் துறவியாக இருக்கும் எந்தவொரு நபரும் இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதி பெறமாட்டார்.

**குறிப்பு:**
மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்க சேவையின் / மாகாண அரசாங்க சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

05. **வயது**.-

I. ஆகக்குறைந்த வயதெல்லை: 18 வயதிற்கு குறையாததாக இருத்தல்.

II. ஆகக்கூடிய வயதெல்லை: 35 வயதிற்கு மேற்படாததாக இருத்தல்.
(அதனடிப்படையில் 2001.10.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1984.10.11 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியைக் கொண்ட நபர்கள் மட்டும் இதற்கென விண்ணப்பிக்கலாம்.)

**குறிப்பு**: தற்போது அரசாங்க சேவையில் /மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

06. **பரீட்சைக் கட்டணங்கள்**: பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இக்கட்டணத்தை பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 இற்கு வரவு வைக்கப்படக்கூடியவாறு மாவட்ட / பிரதேச செயலகத்தில் செலுத்துதல் வேண்டும். மாவட்ட / பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் ஒரு பிரதியை விண்ணப்பதாரி தம்வசம் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணமானது எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

07. **விண்ணப்பிக்கும் முறை**: விண்ணப்பப்படிவத்தை A 4 அளவிலான கடதாசியில், இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கமைய தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். இப்படிவத்தின் 01 தொடக்கம் 02 வரையான பகுதிகளை முதலாவது பக்கத்திலும் 03 தொடக்கம் 04 வரையான பகுதிகளை இரண்டாவது பக்கத்திலும் மிகுதியை 03 ஆவது பக்கத்திலும் வரக்கூடிய விதத்தில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

தற்போது அரசாங்க /மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு கிடைக்கும் விதத்தில் தமது திணைக்கள /நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தின் தனிப்பட்ட பெயருக்கு அல்லது வேறு உத்தியோகத்தரது தனிப்பட்ட பெயருக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் கூடாது.

இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.10.11 ஆந் திகதிக்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை,இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், மோட்டார் வாகனப் பரிசோதகர் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)" எனக் குறிப்பிடல் வேண்டும்.

உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத,அல்லது உரிய முறையில் விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்படாததுடன், விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புடைய ஏதேனும் கடிதமொன்று தபாலில் தொலைந்து போனமைக்காக கிடைக்கும் முறைப்பாடும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. எனவே உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டியது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

08. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.-

I. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதப்பட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையைக் கொண்ட, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுசீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால், பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பட்டமை குறித்து பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளிலும், திணைக்களத்தின் இணையத் தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் தமது அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விதத்தில் அது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் வசிக்கும் ஒருவரெனின் அவ்விபரங்களுடன், பெக்ஸ் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையை பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில்,விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கம் ஒன்றைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி, கேட்டறிதல் மிகப் பொருத்தமாக அமையும். அவ்வாறு கேட்கும்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் தம்மிடம் வைத்திருந்த விண்ணப்படிவத்தின் பிரதி, பற்றுச்சீட்டின் பிரதி,பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு என்பனவற்றை தயாராக வைத்திருத்தல் சிறந்தது.

II. விண்ணப்பதாரி தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன் அனைத்து விண்ணப்பதாரிகளும் தாம் பரீட்சைக்குத்தோற்றும் முதல் நாளில் தமது அனுமதி அட்டையை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் பரீட்சைகள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

III. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் ஊடாகவும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாகவும் உறுதிப்படுத்த வேண்டியதுடன், ஏனைய விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர் / ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் / கிராம அலுவலர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ பிரதசித்திபெற்ற நொத்தாரிசு / முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர் / அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவை அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த

விகாரையின் விகாராதிபதி அல்லது ஏனைய மதத் தலைவர் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

IV. விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் என்பது அவர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பெற்றுள்ளார் எனக் கருதுதல் ஆகாது.

V. பரீட்சைகளை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களை மீறின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு ஆளாக நேரும்.

09. **பரீட்சார்த்தியின் அடையாளம்:** தாம் தோற்றுகின்ற அனைத்து பாடங்கள் தொடர்பிலும் மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சைகள் மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான கடவுச்சீட்டு
III. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

10. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் ஒரு பரீட்சார்த்தி, இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது அதற்குப் பின்பு அல்லது எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்திக்கான நிலை இரத்துச் செய்யப்பட முடியும். பரீட்சார்த்தி வேண்டுமென்றே பிழையான தகவல்களை வழங்கியிருப்பது அல்லது முக்கிய தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவரென அவரது சேவைக்காலத்தின் எந்நேரத்திலேனும் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரை உடனடியாக பதவியிலிருந்து நீக்குவதற்குக்காரணமாக அமையும்.

11. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில், ஒவ்வொரு மொழிகளுக்கும் இடையில் பொருத்தப்பாடின்மை தெரியவரின் சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட அறிவித்தலே செயல்வலுப்பெறும்.

12. இவ்விதிகளின் படி செயற்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழு எடுக்கும் முடிவின் படி செயற்படுத்தப்படும்.

ஏ. எச். கே. ஜகத் சந்திரசிறி,
மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்,
2019, செத்தெம்பர் 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு**
**மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவைத் தொகுதியின் மோட்டார் வாகனப் பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)**

**Open competitive examination for recruitment of Examiners of Motor Vehicles in Technological Service Category of Supervisory Management level in the Department of Motor Traffic - 2018 (2019)**

பரீட்சை இலக்கம் :
அலுவலகப் பயன்பாட்டிற்கு

பரீட்சையில் தோற்றவிருக்கும் மொழி மூலம்
சிங்களம் - 2 தமிழ் - 3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

1.0 பெயர் :

1.1 முழுப் பெயர் : ..........................................................................................
..........................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர்: Mr./Mrs./Miss. ..........................................................................................
..........................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) உதா: Mr. SILVA A.B.

1.3 முழுப் பெயர் : ..........................................................................................
..........................................................................................
(சிங்களத்தில் / தமிழில் )

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:

1.5 பால் : (ஆண்/ பெண்)

2.0 2.1 நிரந்தர முகவரி ..........................................................................................
..........................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

2.2 நிரந்தர முகவரி: ..........................................................................................
..........................................................................................
(தமிழில் / சிங்களத்தில்)

2.3 அலுவலகமுகவரி:..........................................................................................
..........................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

2.4 அலுவலக முகவரி:..........................................................................................
..........................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.5 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி :..........................................................................................
..........................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

2.6 கைத்தொலைபேசி இலக்கம்: :

கைத்தொலைபேசி :
நிலையான தொலைபேசி :

3.0 3.1 விவாக நிலை : விவாகமானவர் - 1 விவாகமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

3.2 பிறந்த திகதி: :

ஆண்டு | மாதம் | திகதி

3.3 2019.10.11 ஆந் திகதியில் வயது

வருடங்கள் | மாதங்கள் | நாட்கள்

4.0 கல்வித் தகைமைகள்:

4.1 க.பொ.த .(உ.த)

பரீட்சை இலக்கம்: ............................................ வருடம்:...............................

| பாடங்கள் | சித்திகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

4.2 க.பொ.த. (சா.த) :

பரீட்சை இலக்கம்:: ............................................ வருடம்:...............................

| பாடங்கள் | சித்திகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

4.3 பிற தகைமைகள்:
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

5.0 செலுத்திய பரீட்சைக் கட்டணம்:

i. இலக்கம்: ............................................ iii. பணம் செலுத்திய இடம்: ..................................
ii. திகதி: .................................................. iv. செலுத்திய தொகை ரூ. : ............................

பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இங்கு ஒட்டவும்.

**விண்ணப்பதாரியின் சான்றிதழ்:** இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உரிய விதத்தில் சரியானது எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலக்கம் .................... மற்றும் .................... ஆந் திகதிய பற்றுச் சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும், வெளிப்படுத்துகின்றேன். பரீட்சைக்காக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமையவும், சட்டதிட்டங்களுக்கமையவும் நான் தகைமையற்றவன் எனத் தெரிய வந்தால் பரீட்சைக்கு முன்னர்அல்லது பரீட்சை இடம்பெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் எனது விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படுகின்ற ஏதேனும் தீர்மானங்கள் இருப்பின் அதற்கு நான் இணங்குகின்றேன் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் உட்படுகின்றேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

திகதி: ......................... ...................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

எனது அலுவலகத்தின் உத்தியோகத்தர் மற்றும் எனக்கு தனிப்பட்ட விதத்தில் தெரிந்தவரான திரு./திருமதி/ செல்வி..................................... அவர்கள் ................................ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அந்த பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(தற்போது அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் ஒரு விண்ணப்பதாரியெனின் மட்டும்)

திரு./திருமதி/செல்வி......................................................................................... அவர்கள் .......................... ஆந் திகதிக்கு அண்மித்த ஐந்து வருட காலப்பகுதியுள் (அ) தமக்குரிய அனைத்து சம்பள படியேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் எனவும் (ஆ) எச்சரிக்கை தவிர்ந்த எந்தவொரு தண்டனைக்கும் உட்படவில்லை எனவும் விசாரித்து, ஐயமின்றி தெரிந்து கொண்டேன்.

இவ்விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையெனவும், உரிய கட்டணங்களைச் செலுத்தி யுள்ளார் எனவும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

இவ்வுத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும்.

திகதி: ........................ .................................

திணைக்களத் தலைவரது கையொப்பம்
மற்றும் பதவிப் பெயர்

9-406

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018 (2019)

2015.09.01 ஆந் திகதிய 1930/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு இணங்க இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பில் இருந்து விசேட வகுப்புக்கு இணைத்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2019, திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

2. 2018.12.31 ஆந் திகதியன்று-

(i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுதியின் I ஆவது தரத்தில் ஆகக்குறைந்தது (5) வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்து உரிய சம்பள ஏற்றங்கள் (5) இனைப் பெற்றுக்கொண்டுள்ள,

(ii) தரமுயர்வுத் தினத்திற்கு உடன் முன்னரான ஐந்து (05) வருடத்தினுள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியுள்ள,

(iii) மூன்றாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்தியுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறு வார்கள்.

3. விசேட வகுப்பு அலுவலர்கள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள சம்பளத் திட்டம் செல்லுபடியாகும்:-

(MN-7-2016 4 ஆம் படிமுறை) ரூபா 43,845-8 x 755 - 18 x 1,030 - ரூபா 68,425

4. இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I இல் இருந்து விசேட வகுப்பிற்கான தரமுயர்வு பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படும்.

(i) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் விசேட தரத்திற்கு 2018.01.01 ஆந் திகதியிலிருந்து 2018.12.31 ஆந் திகதி வரை ஒவ்வோர் திணைக்களத்திலும் மற்றும் அமைச்சிலும் அவ்வந்த பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும் ;

(ii) விசேட தரத்திற்கு இணைத்துக்கொள்வதற்கான மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டியது 2018.01.01 ஆந் திகதியிலிருந்து 2018.12.31 ஆந் திகதி வரை காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைகளை நிரப்புவதற்கு மட்டுமேயாகும் ;

(iii) இணைத்துக்கொள்ளப்படும் சதவீதங்கள் :
மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 40%
சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் 60%

(iv) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 04 ஆகக் காணப்படுமிடத்து மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் 25% (சதவீதம்) ஆகவும், சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படும் 75% (சதவீதம்) ஆக இருக்க வேண்டியிருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 03 ஆக இருக்கும்போது மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்பப்படும் வெற்றிடங்களின் சதவீதம் 33.33% மற்றும் சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் சதவீதம் 66.66% ஆகவும் இருக்க வேண்டும் ;

(v) இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 04 ஐ விட அதிகமாக இருப்பின் மேற்படி 04 (iii) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தின்கீழ் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும் ;

(vi) பொது நிருவாக அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் விசேட வகுப்பிற்கு தரமுயர்த்து வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதில் சித்தியடைபவர்கள் அதனுடன் தொடர்பு பட்ட ஏனைய தேவைகளையும் பூரணப்படுத்தப் பட்டதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும் தேர்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பரீட்சையின் திறமைகளின் ஒழுங்கில் மற்றும் நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக் கைக்கு ஏற்ப பரீட்சை நடைபெற்ற தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் விசேட வகுப்பிற்கான பதவியேற்றம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும்.

(vii) வெற்றிடங்களை நிரப்பும் சந்தர்ப்பத்தில் விண்ணப்ப தாரிகளுக்கிடையில் ஒவ்வோர் வெற்றிடங்களும் ஏற்பட்ட தினத்திற்கு அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களின் திறமைகளின் ஒழுங்கிற்கு ஏற்ப குறித்துரைத்த பதவியேற்றத்திற்காக கவனத்திற்கொள்ளப்படும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க விண்ணப்பதாரர் சுயமாக விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் அவர்கள் பணிபுரியும் மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2019.10.14 ஆந் திகதிக்கு முன்னர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவக மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை எழுதுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

(i) பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திலும் மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய வகையில் தமது ஆள் அடையாளத்தை விண்ணப்ப தாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

(ii) மேற்படி ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் அடிப்படையில் இரத்துச்செய்யப்பட முடியும்.

7. **விண்ணப்பப்படிவம் :**

(i) "ஏ4" அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். 1 முதல் 5 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சு மூலம் தயாரித்துக் கொள்ள முடியுமாயினும் அது சரியாகவும் தெளி வாகவும் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழி யிலும் எழுதப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக் கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். அதனால், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருப்பது சாலவும் சிறந்ததாகும்.

(iii) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பரீட்சைக்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அம்மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளித்தல் வேண்டும்.

(iv) முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும், அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில் தோற்றும் அலுவலர்கள் 600 ரூபாவைப் பரீட்சைக் கட்டணமாக 20-03-02-13 என்ற பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்புக்கு யாதேனும் தபால் / உப தபால் அலுவலகங்களுக்கு அல்லது பிரதேச/மாவட்டச் செயலகத்திற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமானது. இப்பரீட்சைக்காகச் செலுத்திய கட்டணத்தை மீளப்பெறுவதற்கோ அல்லது வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்றவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

8.

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மட்டும் விண்ணப் பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க கணிப்பின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் குறித்துரைக்கப்பட்டிருப்பின் குறித்த பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம், உள்வாங்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவை, விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப் பத்தினை உறுதிப்படுத்தல், திணைக்களத் தலைவரின் பரிந்துரை அத்தாட்சிப்படுத்தல் ஆகியவற்றுடன் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும். பரீட்சைக்கு விண்ணப் பித்த அலுவலர்கள் அனைவருக்கும் பரீட் சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறே பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொண்டதாகக் கருதுதல் கூடாது.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாகக் குறிப்பிட்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் செய்தித் தாள்களிலும் திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளத்திலும் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும். அவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக "பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு (நிறுவக மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையிடம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரியப்படுத்துமிடத்து போது விண்ணப்பதாரி தாங்கள் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினையும் திருத்தமாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராக இருப்பின் மேலுள்ள விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றினை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தினைக் குறிப்பிட்டுக் கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்வது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரணை செய்யும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதாவதொரு தகவலினை உறுதிப்படுத்துவதற்காக தாங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பத்தின் பிரதியை, பரீட்சைக் கட்டணம் செலுத்தல் குறித்து ரைக்கப்பட்டிருப்பின் அது குறித்த பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்பும்போது பதிவுசெய்த பற்றுச் சீட்டினைத் தயார்படுத்தி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

(iii) விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர், பரீட்சை மண்டபத்தில் தமக்குரிய இலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியுள்ளதுடன், பரீட்சை நடைபெறும் தினத்தன்று தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

09. மேலே (08) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

10. **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்**.- இப்பரீட்சையின் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுச் செயலாளரினால் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. **பரீட்சை நடைமுறைகள்**.- I ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களை விசேட வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை 2 வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

(1) *உளச்சார்புப் பரீட்சை*.- நேரம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்
(2) *முகாமைவத்துவம்*.- நேரம் : 3 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

தகுதிபெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :

***உளச் சார்பு-பாட இலக்கம்** (1)*.- தனக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் சாதாரண செயலாற்றுகை மட்டத்தினைத் தாண்டிய செயற்றிறனைக் கொண்டதாக நிறைவேற்றுவதற்காக தேவைப்படும் அறிவு, ஆற்றல் மற்றும் மனோநிலை என்ப வற்றினை பெற்றிருக்கின்றாரா என்றும் அவற்றினைப் பிரயோகித்தலின்போது உச்ச திறமையினைக் காட்டுகின்றனரா எனவும் அளவிட்டுப் பார்க்கும் ஒரு பரீட்சிப்பாகும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை அளிப்பதற்கான அமைப்பினைக் கொண்ட 50 வினாக்களையுடையதாகக் காணப்படுவதுடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

இரண்டாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :

***முகாமைத்துவம்-பாட இலக்கம் (2) :***

(i) முகாமைத்துவம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்
(ii) முகாமைத்துவ தொழிற்பாடுகள் :
திட்டமிடல்
தீர்மானங்கள் எடுத்தல்
தீர்மானங்களை எடுக்கும் செயன்முறை
ஒழுங்கமைப்பு
பதவிநிலைப்படுத்தல்
செயற்படுத்துதல்
ஊக்குவிப்புச் செயன்முறை
தலைமைத்துவம்
நிர்வாகம்
நிர்வாகக் கொள்கைச் செயன்முறை
(iii) பங்குபற்றல் முகாமைத்துவம்
(iv) முகாமைத்துவச் சூழல்
(v) விடய ஆய்வு

இது ஒரு கட்டமைப்பு வினாப்பத்திரமாகும். இதில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

12. பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாகவும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். மேற்படி சட்டவிதிகளை மீறின், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவார். இவ்வறிவித்தலுக்கு உரித்துடைய நிபந்தனைகளுக்கு ஏற்ப யாதேனுமொரு பரீட்சார்த்தி அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனக் காணுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது அதற்குப் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தம் இரத்துச் செய்யப்பட முடியும்.

13. இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் காணப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

14. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் யாதேனும் இணக்கப்பாடின்மை காணப்படுமாயின் சிங்கள மொழியிலுள்ள வாசகமே செல்லுபடியானதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ
மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு.

பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ
மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2019, ஓகஸ்து 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலகப் பயன்பாட்டுக்குரியது)

**இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018 (2019)**

**Limited Competitive Examination for Promotion of the Officers in Grade I of Sri Lanka Technological Service to Special Grade - 2018 (2019)**

1. (அ)பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

நீங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது மாகாண அரசாங்க சேவையிலா, அவ்வாறல்லாதுவிடின் எவ்வகையான அரசாங்க சேவையில் என்பது-

(நீங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ள அரசாங்க சேவைக்குரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக.)

(மேல் மாகாண அரசாங்க சேவை - 01/மத்திய மாகாண அரசாங்க சேவை - 02/தென் மாகாண அரசாங்க சேவை - 03/வட மாகாண அரசாங்க சேவை - 04/கிழக்கு மாகாண அரசாங்க சேவை - 05/வடமேல் மாகாண அரசாங்க சேவை - 06/வடமத்திய மாகாண அரசாங்க சேவை - 07/ஊவா மாகாண அரசாங்க சேவை - 08/சப்பிரகமுவ மாகாண அரசாங்க சேவை - 09/மத்திய அரசின் அரசாங்க சேவை - 10)

(ஆ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :--------------------------------------------.
உதாரணம் : (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக் களில்) :----.
உதாரணம் : (GUNAWARDHANA, H. M. S. K.)

(ஈ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-------------------------------------------------------.

(உ) அலுவலக முகவரி (இம்முகவரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்) :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :--------------------------------------------------------------.
(சிங்களத்தில்/ தமிழில்) :---------------------------------------------------------------------.

(ஊ) பால் (ஆண்/ பெண்)
(ஆண்-0, பெண்-1) (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(எ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

(ஏ) கையடக்க தொலைபேசி இலக்கம் :

2. நீங்கள் பணிபுரியும் திணைக்களம் :-----------------------------------------------------------------.

3. பதவிப் பெயர் :----.

4. 2018.12.31 ஆந் திகதியன்று சேவைக்காலம் :
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

5. (i) பிறந்த திகதி- ஆண்டு மாதம் திகதி

(ii) 2018.12.31 ஆந் திகதியன்று வயது-
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை அல்லாதவிடத்து பரீட்சைக் கட்டணமான 600 ரூபாவைச் செலுத்திய பற்றுச் சீட்டினை இவ்விடத்தில் நன்றாக ஒட்டுக. (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடத்தில் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
செலுத்திய தொகை :----.

மேலே குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை என்றும், மேற்குறிப்பிட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துள்ளது என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவ தாகவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவரின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் அல்லது தமது பிரதேச அலுவலகத் தலைவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

எனது அலுவலகத்தில் தற்போது பணிபுரியும் அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி ..............................என்பவர் .......................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பனையும், பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துவதில் இருந்து விடுதலை என்றும் அல்லது குறித்துரைத்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதனையும் மேற்படி பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் பரிந்துரை மற்றும் சான்றிதழ்**

(i) இவ்விண்ணப்பதாரிக்கு எதிராக நடாத்தப்படும் அல்லது நடாத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக திணைக்களத் தலைவரின் பரிந்துரை
---------------------------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------------------------

(ii) மேலே இல. 01 முதல் 05 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப் பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் அவர் தகுதியானவர் என்பதையும், பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துவதிலிருந்து விடுதலை என்றும் அல்லது உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும், கையொப்பமும் திகதியும் இடப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.
உத்தியோகபூர்வ முத்திரை

திகதி :----.

**குறிப்பு**.- உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று பரீட்சார்த்தியின் தனிப்பட்ட கோவைக்கு அனுப்பப்பட வேண்டும். மற்றைய பிரதி காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

PROCUREMENT FOR THE SUPPLY OF 9, 000 NOS. LESS HIGH CONCRETE SLEEPERS TO SUIT EN45 E1 RAILS FOR CHECK RAILED TRACK FOR STATIONS BETWEEN BANDARAWELA AND BADULLA PROCUREMENT No. - SRS/F . 7635

பண்டாரவளை மற்றும் பதுளை ஆகிய புகையிரத நிலையங் களுக்கிடையில் EN 45E1 புகையிரதங்களுக்குப் பொருந்தக் கூடிய தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்காக உயரம் குறைந்த 9, 000 சிலிப்பர் கட்டைகளை வழங்குவதற்காக கொழும்பு, இலங்கைப் புரகயிரத சேவைகள் திணைக்களப் பெறுகைக் குழுவின் (உயர்மட்டம்) தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

2. 2019.09.19 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சியத் திணைக்களம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம் என்ற முகவரியில் விலைமனுக்கள் மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத படிவக் கட்டணமாக ரூபா 17,300 ஐச் செலுத்தி 2019.09.18 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரை கொழும்பு -10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுப்படிவத் தொகுதியில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு -10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சியத் திணைக்களம், புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அனுமதிபெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்திருக்குமாறு அழைக்கப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் பதிவுத் தபாலின் மூலம் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படலாம்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியத்தின் அத்தியட்சகர் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,கொழும்பு -10.

6. இலங்கை, கொழும்பு -10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாக விலைமனுப்படிவங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. மேலதிக விபரங்களிற்காக தொடர்பு கொள்ள வேண்டியது.-
தொலைபேசி இல.: 94(11)2438078 அல்லது 94(11) 2436818.
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr @gmail.com
இணையம் : www.railway .gov. lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

Ref No. SRS/F. 7635

9- 351

---

இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

நோக்க சக்தி (Motive Power) உப திணைக்களத்திற்கு மீள் தண்டவாளமிடும் உபகரணம் மற்றும் துணைப்பாகங்களை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் செயற்படுத்தலுக்கான பெறுகை

இலங்கை, கொழும்பு - 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத தலைமையக, இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுத் (உயர் மட்டம்) தலைவர், நோக்க சக்தி (Motive Power) உப திணைக்களத்திற்கு மீள் தண்டவாளமிடும் உபகரணம் மற்றும் துணைப்பாகங்களை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் செயற்படுத்தலுக்கான பெறுகை செயற்பாட்டிற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். விலைமனுதாரர்கள் தமது விலைமனுக்களை நேரடியாகவும் அல்லது இலங்கையின் பதிவுடைய தர அங்கீகாரம் பெற்ற அவர்களின் அற்றோணித்தத்துவம் வழங்கப்பட்ட முகவர்களின் ஊடாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. 2019.10.07 ஆந் திகதி இலங்கை நேரம் பி. ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக இருபதாயிரம் ரூபாவை (20,000.00) ஐ மாத்திரம் இலங்கை ரூபாவில் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான தொகையை செலுத்திய பின்னர் இலங்கை, கொழும்பு - 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகளின் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. 2019.10.08 ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு ( இலங்கை நேரம்) விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுறும். முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ பின்வரும் நபருக்கு விலைமனுக்கள் மூடப்படும் நேரத்திற்கு முன் கிடைக்கப் பெறச் செய்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர்மட்டம்),
புகையிரத சேவைகள் களஞ்சியத்தின் அத்தியட்சகர் அலுவலகம்,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை,கொழும்பு -10.

4. விலைமனுக்கள் மூடப்பட்ட உடனடுத்து மேற்படி 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகவரியில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

5. விலைமனுக்களை புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலும் இயைபுடைய நாடுகளின் இலங்கைத் தூதரகங்களிலும் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வரும் நபருடன் தொடர்பு கொள்ளவும்.-
புகையிரத சேவைகள் அத்தியட்சகர், கொழும்பு 10,
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr @gmail.com ,
இணையத்தளம் : www.railway .gov. lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு, (உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

Ref No. SRS/F. 7656

9-352

---

இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

Procurement For The Supply of 5,000 Nos. Base Plates to Suit 90(A) Lbs. Rail Seat & Elastic Clip and 5,000 Nos. Switch Heel Bolts with Nuts to Srilanka Railways

Procurement No.: SRS/ F. 7648

1. இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு 5,000 Nos. Base Plates & 5,000 Nos. Switch Heel Bolts with Nuts ஆகியவற்றின் பெறுகைக்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் ( உயர் மட்டம்) பெற்றுக் கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை நேரடியாக அல்லது அவர்களினால் அற்றோணித்தத்துவம் வழங்கப்பட்ட இலங்கையில் பதிவு பெற்றுள்ள தர அங்கீகாரம் பெற்ற முகவரூடாகவும் சமாப்பிக்கலாம். அனைத்து மூன்று (03) அம்சங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு ஒன்றாகவே ஒப்பந்தம் வழங்கப்படும்.

2. விலைமனுக்கள் புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட் சகரின் அலுவலகத்திலிருந்து மாத்திரம் அல்லது வெளிநாடு களிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களிலிருந்து 2019. 10.03 ஆந் திகதியன்று இலங்கை நேரம் பி.ப.3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 5,500.00 இலங்கை ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான பணத்தொகையில் பெறக்கூடிய படிவங்களிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. 2019.10.04 ஆந் திகதியன்று இலங்கை நேரம் பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

4. Base Plate and Switch Heel Bolts With Nuts ஆகியவற்றின் உற்பத்தி /வழங்கல் ஆகியன ISO 9001: 2008 என்ற சான்றுழிக்கப்பட்டதிற்கு அல்லது கொள்வனவுக்காரரினால் ஏற்றுக் கொள்ளக்கூடியவகையிலமைந்த நிகரான சர்வதேச தர முகாமைத்துவ முறைமை நியமத்திற்கானதாக இருத்தல் வேண்டும்.

5. விலைமனுக்களை அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே புகையிரத களஞ்சியசாலைகளின் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத சேவைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,கொழும்பு -10.

7. விலைமனுக்கோரல் ஆவணங்கள் புகையிரத சேவைகள் களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr @gmail.com ,
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு
(உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இல. SRS/F.7648

9-353

---

காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

விலைமனுக் கோரல்

பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2020

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2019.10.14ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி. ப. 2.05 மணிக்குத் திறக்கப்படும்.

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | கொழும்பு | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கிருலவீதி, நாராஹேன்பிட்ட. | கொலன்னாவை பத்தரமுல்லை கோட்டே நகருக்கு அருகில் | 2020.01.01 இருந்து 02 வருடங்களுக்கு |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தபட்சம் மூன்று வண்டிகள் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதியும் அத்துடன் வாகனத் தரிப்பிட வசதியும் இருத்தல் வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “ பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)” எனக் குறிப்பிட்டு 2019.10.14 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

எஸ். எம். பீ.பீ. சங்கக்கார,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 5,
2019.08.23.

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம்

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்குக் கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2020**

**கட்டிட உரிமையாளருக்காக:**

01. முழுப்பெயர் :----.
02. முகவரி :----.
03. தொலைபேசி இலக்கம் :----.
04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது? ----.
02. மாதாந்த வாடகைத் தொகை ? ----.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி: ----.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ : ----.
05. இடத்தின் விஸ்தீரணம் : ----.
06. கட்டிடத்தின் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் :----.
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில் /கம்பி வேலி/. . . . . . ): ----.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை : ----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

9- 423

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

**உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவு**

2020 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளை மீண்டும் குத்தகைக்கு வழங்கல்

2020 ஆம் ஆண்டுக்குரிய வகையில் 2019.08.20 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு உடபலாத்த பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட புஸ்ஸெல்லாவ மற்றும் வஹுகெபிட்டிய கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நடவடிக்கையின் போது கேள்வி அறிவித்தல் சபை திருப்தியுறும் வகையில் கேள்வி அறிவித்தல் விலை மனுக்கள் முன்வைக்கப்படாமையின் காரணமாக மேற்படி கள்ளுத் தவறணைகளை மீண்டும் குத்தகைக்கு வட மதுவரிகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய அறிவித்தல் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2020 ஆம் ஆண்டில் கள்ளு தவறணைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை கொள்வனவு செய்வதற்காக உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2019.09.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன்–

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், மற்றும்

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப் படுகிறது.

கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்துத் திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரம்–

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ; மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ். என்பன இணைக்கப்பட்டு,

கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கமும் பெயரும் குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

